17 இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# தொழிலாளர் பாதை

3/

மாதமிரு இதழ் — 433 ● 1993 ஏப்ரல் 16 வெள்ளிக்கிழமை

## மேதின ஊர்வலமும் கூட்டமும்

★ ஏகாதிபத்திய யுத்தத்தையும் காலனித்துவத்தையும் எதிர்ப்போம்! நான்காம் அகிலத்தைக் கட்டியெழுப்புவோம்!

ஊர்வலம்: மே 1, பி. ப. 1மணிக்கு (கொச்சிக்கடை அந்தோனியார் ஆலய அருகில்) நியூஹாம் சதுக்கத்தில் ஆரம்பம்

கூட்டம்: பி. ப. 4மணி கொட்டாஞ்சேனை இரத்தினம் மைதானம்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்-இளம் சோஷலிஸ்டுகள்

# யெல்ட்சினின் சர்வாதிகாரத்துக்கு ஏகாதிபத்தியம் ஆதரவு

டேவிட் நோத்
அமெரிக்க வேர்க்கஸ் லீக் தேசிய செயலாளர்.

பொறிஸ் யெல்ட்சினுக்கும் மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசுக்கும் இடையேயான போராட்டத்தின் உடனடி விளைவு எனைவாக இருப்பினும் இப்புதிய நெருக்கடி ருஷ்ய, அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்துக்கு ஒரு தீர்க்கமான படிப்பினையை வழங்கியுள்ளது: அதாவது, முன்னைய சோவியத் யூனியனில் முதலாளித்துவத்துககுச் செல்ல சமாதான, ஜனநாயகப் பாதை கிடையவே கிடையாது. முதலாளித்துவப் புனருத்தாரணமும் ருஷ்யாவை உலக ஏகாதிபத்தியப் பொருளாதாரத்தினுள் இணைப்பதும்—ருஷ்யாவைத் துண்டாடுவதும, சிதறுண்ட மிச்ச சொச்சங்களை ஒரு அரைக் காலனித்துவ அந்தஸ்துக்குக் குறைப்பதும், சோவயத் சமுதாயத்தின் கவர்ச்சிகரமான சமூக, கலாச்சாரத் தேட்டங்களை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில் கட்டுமானத்தினை முறைமுறையாக ஒழித்துக்கட்டுவதும், சனத்தொகையின் பரந்தளவிலானோரை ஏழைகளாக்குவதும்—கொடிய சர்வாதிகார விதிமுறையின் ஊடாக மட்டுமே அடையப்பட முடியும்.

ருஷ்யாவின் நிகழ்வுகளின் நிஜ அர்த்தத்தினை புரிந்து கொள்வதற்கு எல்லாவற்றுக்கும் முதல், அது அப்படி இல்லையா எனக் கேட்டுக் கொள்வது அவசியம். முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் இந்த அரசியல் நெருக்கடியை 'ஜனநாயகவாதி' யெல்ட்சினுக்கும் மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசின் 'கம்யூனிஸ்ட் கடும் போக்காளர்களுக்கும்' இடையேயான ஒரு போராட்டமாகக் காட்டப்பார்ப்பது அர்த்தமற்றதும் சிரிப்புக்கிடமானதும் ஆகும். காங்கிரஸ் சபாநாயகரான கஸ்புலட்டோவ் 'கம்யூனிஸ்ட்', இல்லாதது போலவே யெல்ட்சினும் ஒரு 'ஜனநாயகவாதி' அல்ல. யெல்ட்சினுக்கும் அவரின் எதிரிகளுக்கும் இடையேயான மோதுதல் ஈடு செய்ய முடியாத பொருளாதார கொள்கைகளின் மேல் ஏற்படவில்லை. கஸ்புலட்டோவ் யெல்ட்சினுக்கு எதுவிதத்திலும் குறையாத விதத்தில் ஒரு முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஸ்தாபிதத்தினை ஆதரிக்கின்றார்.

எவ்வாறெனினும் அங்கு நிஜ வேறுபாடுகள் இருக்கவே செய்கின்றன. யெல்ட்சின். பழம் சோவியத் பொருளாதாரத்தின் அழிபாடுகளைத் தொடர்ந்து கொள்ளையடிப்பதையும் எண்ணெய் வயல்கள், தங்கக் கையிருப்புக்கள் தொடக்கம் விலைமதிப்பற்ற கலைப் படைப்புக்களை அமெரிக்க, ஐரோப்பிய, ஆசிய முதலாளிகளுக்கு விற்றுத தள்ளுவதன் மூலம் தம்மை செல்வந்தர்களாககிக் கொள்ளும் எண்ணற்ற மாபியா பாணியிலான கும்பல்களைக் கொண்ட கொம்பிரதோர் முதலாளித்துவத்தின் விவாதத்துக்கு அப்பாற்பட்ட தலைவர். கடந்த ஆண்டில் ருஷ்ய 'வர்த்தகர்களால்' இந்த விதத்தில் திரட்டப்பட்ட கோடானுகோடி டாலர்கள் வெளிநாட்டு வங்கிக் கணக்குகளில் பொதியாகத் தளளப்பட்டதோடு, ஏகாதிபத்திய வங்கிகளின் திரவப் பிரச்சினைகளைத் தணித்து வைப்பதில் ஒரு குறிப்பிடத்தக்க பாத்திரம் வகித்துளளது,

அரசுடமைக் கைத்தொழில்களுடன நீண்டதும் இறுக்கமுமான பந்தங்கள் கொண்ட ஸ்டாலினிச அதிகாரத்துவங்களின் ஆளுமைக்குள்ளான ருஷ்ய காங்கிரசின் உள்ளே யெல்ட்சினின் கையாட்களின் வெறிகொண்ட ஊகங்களுக்கு எதிர்ப்பு வளர்ச்சி கண்டதற்கு இரு காரணங்கள் உண்டு. முதலாவதாக, ருஷ்யாவின் திரண்ட செல்வத்தினை மண்புழு போல் தின்று ஏப்பமிடுவதும் அதன் கைத்தொழில்களை சிதறடிப்பதும் நீண்ட காலத்தில் ஒரு நிறைறுபிடிக்கக் கூடியதும் அனைத்துலக ரீதியில போட்டிமிக்கதுமான ஒரு தேசிய முதலாளித்துவப் பொருளாதாரத்தின் ஒரு நிஜ மறுநிர்மாணத்துக்குத் தடையாக விளங்கும் என்பதில் கஸ்புலட்டோவ் கன்னை உறுதியாக இருந்தது இரண்டாவதாக, யெல்ட்சினின் கொள்கைகளுக்கு முன்னொரு போதும் இல்லாத வெகுஜன வெறுப்பும், எதிர்ப்பும் கிளம்பலாம் எனவும் நம்பிக்கையானதும் போதியதுமான ஒடுக்கு முறைச் சாதனங்களை தயார் செய்வதற்கு முன்பே முதலாளித்துவ புனருத்தாரண வேலைத்திட்டத்துடன் இனங்காட்டிக் கொண்டவர்களுக்கு எதிரான ஒரு வெகுஜன சமூக வெடிப்பாக அது விரைவில் ஏற்படலாம் என அஞ்சியது.

யெல்ட்சின், கஸ்புலட்டோவ் இடையே கடந்த வருடத்தின் பெரும்பகுதியில் இடம்பெற்ற சண்டையின் — முடிவற்றபண்பானது எந்தவொரு கன்னையும் கணிசமான சமூக ஆதரவினை நம்பியிருக்க முடியாது என்ற உண்மையைப் பிரதிபலித்தது. மேலும் தம்மிடையேயான ஒரு கடும் போராட்டம் எழுச்சி கண்ட தொழிலாள வர்க்கத்தின் தலையீட்டுக்கான அரசியல் ஆரம்பத்தினை வழங்கலாம் எனவும் தமது பெரிதும் பரஸ்பரம் பேரழிவுமிக்க யுத்தத்தினால் அதனைக் கட்டுப்படுத்த யெல்ட்சினாலோ அல்லது கஸ்புலட்டோவினாலோ முடியாது போகலாம் எனவும் இருசாராரும் அஞ்சினர்.

## ஏகாதிபத்தியத்தின் பாத்திரம்

அப்படியானால் இம்மோதுதலை ஒரு முன்னணிக்குக் கொணர்ந்தது என்ன? இக்கேள்விக்கான பதிலை மாஸ்கோவில் அன்றி முக்கிய ஏகாதிபத்திய வல்லரசுகளின் தலைநகர்களில் — எல்லாவற்றுக்கும் மேலாக வாஷிங்டனில் காணவேண்டும். ருஷ்யாவிலான இன்றைய நெருக்கடியின் அபிவிருத்தியினைச் சூழவுள்ள உண்மைகளின் ஒரு தீர்க்கமானதும், புறநிலையானதுமான ஒரு ஆய்வானது மார்ச் 20ம் திகதி யெல்ட்சின் அவசரகால ஆட்சியைப் பிரகடனம் செய்வதை ஏனைய ஏகாதிபத்திய வல்லரசுகளுடன் சேர்ந்து அமெரிக்கா ஊக்குவித்ததோடு உண்மையில் தூண்டியதையும் சந்தேகத்துக்கு இடமற்ற விதத்தில் தெளிவு படுத்துகின்றது.

எல்லாவற்றுக்கும் மேலாக யெல்ட்சினின் நடவடிக்கைகள் கிளின்டன் நிர்வாகத்தினை அதிர்ச்சி அடையச் செய்தன என்று கூற முடியாது. யெல்ட்சின் ருஷ்ய காங்கிரசினை இரத்துச் செய்வதன் சாத்தியம் பற்றி ஜேர்மன் சான்சலர் ஹெல்மட் கோலுடன் கலந்துரையாடியது பற்றி மார்ச் முதல் வாரத்தில் பத்திரிகைகளில் பரந்தளவில் பிரசுரமாகின. சர்வாதிகார விதிமுறைகளைக் கையாளும் யெல்ட்சினின் மிரட்டல்களை கண்டனம் செய்வதற்கு மாறாக பெயர் குறிப்பிடப்படாத வெள்ளை மாளிகை பேச்சாளர், தமது அங்கீகாரத்தினை காட்டும் வழியில் சென்றார், இது நியூயோக் டைம்ஸ் பத்திரிகையை அதன் மார்ச் 13ம் திகதி இதழில் ''திரு.யெல்ட்சின் ஜனநாயகமல்லாத நடவடிக்கைகளை எடுக்கும் ஆபத்தினை கிளின்டன் நிர்வாகம் விளக்காது பின்வாங்கியது ஒழுங்கற்றதாக தோன்றியது''. எனக் குறிப்பிடத் தூண்டியது.

யெல்ட்சின் சதிக்கு முன்னோடியாக பிரித்தானிய, அமெரிக்க பத்திரிகைகளில் வெளியான ஆசிரியத் தலையங்கங்கள் ஏகாதிபத்தியம் ஈவிரக்கமற்ற நடவடிக்கையை எதிர்பார்த்ததைத் தெளிவுபடுத்தியது. த பினான்சியல் டைம்ஸ்

(12 ம் பக்கம் பார்க்க)

அனைத்துலகக் குழுவின் தலைமையிலான
நான்காம் அகிலத்தின்
இலங்கைக் கிளையான
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின்
25 வது ஆண்டு நிறைவு
1968 – 1993



ஆண்டு நிறைவுக் கூட்டம்
1993 ஜூன் 27
கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடம்
கண்காட்சி: காலை 10 மணி
புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்
இளம் சோசலிஸ்டுகள்

## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!

www.padippakam.com



# யெல்ட்சினின் சர்வாதிகாரத்துக்கு ஏகாதிபத்தியம் ஆதரவு..

(17ம் பக்கத் தொடர்ச்சி)

சுடச்சுட அஞ்சாமல் தெளிவு படுத்தும் விதத்தில் ''ஜனாதிபதி ஆட்சியின் இறுதி நடவடிக்கை அல்லது அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்தது தனது சொந்த மக்களைச் சுட்டுத் தள்ள விருப்புடன் உள்ள ஒரு இராணுவமாகும்...' எனப் பிரகடனம் செய்ததோடு யெல்ட்சின் 'தாம் ஆதிக்கம் கொண்டுள்ளதையும் தீர்க்கமான ஆதிக்கம் கொண்டுள்ளதையும் காட்ட வேண்டியதன் அவசியத்தினைக்' காட்டுவதாகக் குறிப்பிட்டது,

அவசரகால ஆட்சியின் நிஜப் பிரகடனமானது அமெரிக்கப் பத்திரிகைகளில் பேரானந்த மான வரவேற்பைப் பெற்றது. த வோல் ஸ்ரீட் ஜேர்ணல் 'இது ஆச்சரியத்துக்கும் ஆதரவுக்கும் உரியது' எனக் குறிப்பிட்டது. நியூயோர்க் டைம்ஸ் இன்னும் மேலே சென்று 'இராணுவத்தைப் பயன்படுத்துவது அவசியமானது என நிரூபிக்கப்படின் யெல்ட்சினின் நடவடிக்கைகளுக்கான ஆதரவு இராணுவத்தினைப் பயன்படுத்துவதையும் உள்ளடக்க வேண்டும்' எனக்குறிப்பிட்டது. யெல்ட்சினின் அவசரகாலச் சட்ட ஆட்சிக்கான பிரகடனத்துக்கான பகிரங்க அங்கீகாரம் ஆசிரியத் தலையங்கக் குறிப்புரைகளுடன் நின்றுவிடவில்லை. 'விரும்பத்தகாதவற்றை' செய்வது அவருக்கு அவசியமாயினும் கூட அமெரிக்கா யெல்ட்சினுக்கு ஆதரவளிக்க வேண்டும் என் புஷ் நிர்வாகத்தில் கடைசி இராஜாங்கச் செயலாளராக விளங்கிய லோரன்ஸ் ஈகிள் பேர்கர் தொலைக்காட்சியில் குறிப்பிட்டார்.

## ஏகாதிபத்தியம் ருஷ்யாவில் ஏன் சர்வாதிகாரத்தை விரும்புகிறது?

அமெரிக்க ஆளும் வர்க்கம் பல தசாப்தங்களாக ஜனநாயகத்தின் பேரில் சோவியத் யூனியனுக்கும் 'கம்யூனிசத்துக்கும்' எதிரான ஓயாத போராட்டத்தினை நடாத்தியது. ஸ்டாலினிசத்தினதும் ஆளும் அதிகாரத்துவத்தினதும் குற்றங்கள் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களிலும் பாடசாலைகளிலும் மார்க்சிசத்தினதும் 1917 அக்டோபர் புரட்சியினதும் தவிர்க்க முடியாத பெறுபேறாகக் காட்டப்பட்டன. ஸ்டாலினிச அதிகாரத்துவம் தான் இரக்கமற்ற முறையில் கொலை செய்த இலட்சோப இலட்சம் போல்ஷிவிக் புரட்சியாளர்களின் சடலங்களின் மேலாக ஆட்சிக்கு வந்தது என்ற வரலாற்று உண்மை புறக்கணிக்கப்பட்டது. குளிர் யுத்தம் ஜனநாயகத்தின் உன்னதமான மனிதாபிமான இலட்சியங்களின் நலனின் பேரிலேயே இடம்பெறுகின்றது என்பதால் சனங்களை மூளைச் சலவை செய்ய ஒரு கணமும் சிக்கனம் பிடிக்கப்படவில்லை. ஆனால் சோவியத் யூனியனின் சரிவுடன் இந்த ஜனநாயக நடிப்புக்களின் மோசடிகள் முறைமுறையாக அம்பலமாக்கப்பட்டு வருகின்றன. 1918 ஜனவரியில் லெனினின் உத்தரவின் பேரில் எதிர்ப்புரட்சி அரசியலமைப்புச் சபை கலைக்கப்பட்டமை 74 ஆண்டுகளாக எண்ணற்ற தலைக்கனம் கொண்ட அறிஞர்களால் ருஷ்ய 'ஜனநாயகத்துக்கு' எதிரான போல்ஷிவிசத்தின் வரலாற்றுக் குற்றமாகக் காட்டப்பட்டு வந்தது.



யெல்ட்சின்



கிளின்டன்

ஆனால் இதோ பாருங்கள், பாருங்கள் புதுமை, இன்று யெல்ட்சினின் அரசியலமைப்புச் சட்ட மீறல்களுக்குத் தாம் வழங்கும் ஆதரவினை நியாயப்படுத்த கிளின்டன் நிர்வாகமும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் வெட்கக்கேடான பொய்களை மலிய விட்டுள்ளன. உண்மையில் மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசின் சகல அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டவர்கள். இது கூடுகிற வெள்ளை மாளிகை என அழைக்கப்படும் கட்டிடம் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களால் உலகளாவிய ரீதியில் 1991 ஆகஸ்ட் சதிக்கு எதிரான மத்திய நிலையமாக வரைந்து காட்டப்பட்டது.

அப்படியானால் இன்று மாறியுள்ளது என்ன? முதலாவதாக ஏகாதிபத்தியம் மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசினை ஒரு தொல்லையாக நோக்குகின்றது. இக்காங்கிரசின் வேலைத்திட்டத்துக்கும் கம்யூனிசம் அல்லது சோசலிசத்துக்கும் எதுவிதமான தொடர்பும் கிடையாது என்பதை ஏகாதிபத்தியம் நன்கு அறியும். இருந்த போதிலும் அது ருஷ்யாவை மறுசீரமைக்கும் தனது வேலைத்திட்டத்துக்கு ஒரு சிறிதளவு எதிர்ப்புத் தன்னும் இருந்து வருவதைச் சகித்துக்கொள்ள இனிமேலும் தயார் இல்லை. உண்மையில் ருஷ்யாவை உலக முதலாளித்துவ அமைப்பினுள் இணைக்க வேண்டப்படும் காட்டுமிராண்டி நடவடிக்கைகளை யெல்ட்சின் எடுக்காது போனால் தாம் தொடர்ந்தும் அவரின் மதுபான பில்லைச் செலுத்தப் போவதில்லை. என ஏகாதிபத்தியவாதிகள் யெல்ட்சினுக்கு அறிவித்துள்ளனர். பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் ஒரு அதிகாரபூர்வமான குரலான த எகொனோமிஸ்ட் தனது மார்ச் 13ம் திகதிய வெளியீட்டில் பின்வரும் எச்சரிக்கையை விடுத்தது: பக்டரிகள் பண்ணைகள் இரண்டுக்கும் மிகவும் தீர்க்கமானதான வலுவின் விலைகளைத் தாராளமயமாக்கத் தவறியதன் மூலம் திரு. யெல்ட்சின் பழைய ஆளும் அமைப்பின் மோசமான திறமையின்மையைத் தொடர்ந்தும் பராமரிக்க உதவியுள்ளார்: வலு இன்னமும் விலைக்கன்றி கோட்டாவுக்கே ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இன்னமும் பாராளுமன்றத்துக்குப் பதில் சொல்ல வேண்டியதாயுள்ள மத்திய வங்கி நஷ்டக்கில் இயங்கும் கைத்தொழில்கள் குறை ஊழிய தொழிலாளர்களின் சம்பளங்களை செலுத்த உதவும் பொருட்டு, அச்சகங்களை நடாத்துவதிலும் பெரிதும் அலங்காரங்களும், பெறும் பெறுமதி மிக்கதுமான வங்கி நோட்டுக்களை திட்டமிடுவதிலும் ஈடுபட்டுள்ளது. திரு. யெல்ட்சின் தாம் தேடிக்கொண்ட அனைத்தும் ''ஹைபர் இன்பிளேசனால்'' அடித்துச் செல்லப்படும் ஆபத்தினைத் தரிசிக்க நேரிட்டுள்ளது.''

அடுத்து த எகொனோமிஸ்ட் ஏகாதிபத்தியம் யெல்ட்சினிடமிருந்து எதிர்பார்ப்பது என்ன என்பதைக் குறிப்பிட்டிருந்தது: ''ருஷ்யன் பொருளாதாரத்துக்கு அவர் பிரயோகிக்க வேண்டியுள்ள அடுத்த தட்டிப்பிடுங்கலை ருஷ்யர்களால் தாங்கிக் கொள்ள முடியாதிருக்கும்: நஷ்டத்தில் இயங்கும் பல பக்டரிகளின் மூடுவிழாவும் அதைத் தொடர்ந்து வரும் வேலையில்லாத் திண்டாட்டத்தின் ஆழமான அதிகரிப்பும்.''

பரந்தளவிலான வேலையில்லாத் திண்டாட்டமும் அதன் பெறுபேறாய் உருவான இலட்சோப இலட்சத்தினரை வறுமையுள் தள்ளவும் பெரும் குறடுகள் அவசியப்படுகின்றது. இது இராணுவம், டாங்கிகள், கண்ணீர்ப் புகைகள், தோட்டாக்கள், சித்திரவதை முகாம்களின் பயன்பாட்டினை வேண்டி நிற்கின்றது.

மக்கள் பிரதிநிதிகள் காங்கிரசுக்கு ஏகாதிபத்தியம் காட்டும் குரோதத்துக்கு மற்றுமோர் முக்கியமான அம்சமும் உண்டு, உலகச் சந்தையில் ருஷ்யா ஒரு போட்டிப் பாத்திரத்தினை வகிப்பதை அனுமதிக்கும் ஒரு தேசிய முதலாளித்துவத்தின் அபிலாசைகளையும் சலனங்களையும் காங்கிரஸ் வரவேற்கும் வரை அதன் இலக்குகள் உலக ஏகாதிபத்தியத்தின் நலன்களுடனும் இலக்குகளுடனும் ஒத்துப்போகமாட்டாது. உலகச் சந்தை ஏற்கனவே நிரம்பி வழிகின்றது! ஏகாதிபத்தியத்தின் நோக்கம் ருஷ்யாவை ஒரு புதிய போட்டியாளனாகக் கட்டியெழுப்புவதன்றி முடிந்த மட்டும் அதன் வளங்களைச் சுரண்டித் தள்ளுவதே.

ஏகாதிபத்தியம் ருஷ்யாவில் வரையறையற்ற மலிவு ஊழியத்தினையும் மூலப்பொருட்களையும் காண்கின்றது. மார்ச் 22ம் திகதி இராஜாங்கச் செயலாளர் வாரன் கிறிஸ்தோபர் நிகழ்த்திய ஒரு பேச்சில் ஏகாதிபத்தியத்தின் கொள்ளைத் தாகம் வழக்கத்துக்கு மாறான நேரடி வடிவம் எடுத்தது.

அவர் கூறியதாவது:''அதன் இன்றைய சகல பொருளாதாரக் கஷ்டங்களுக்கிடையேயும் ருஷ்யா பிறப்பிலேயே ஒரு செல்வமான நாடு என்பதை நினைவில் கொள்வது நல்லது. அதன் மக்கள் நன்கு கல்வி அறிவு பெற்றதோடு அதன் இயற்கை வளங்கள் உலகின் எந்தவொரு நாட்டின் நிலையையும் தாண்டிச் செல்கின்றது. ருஷ்யாவின் எண்ணெய் கையிருப்பு பிரமாண்டமானதோடு அது உரிய முறையில் தேண்டப்படுமானால் ருஷ்யாவின் பொருளாதார சீர்திருத்தங்களின் பெரும்பகுதியை நிதியிட்டம் செய்யக் கூடியது''.

ருஷ்யாவின் 'பொருளாதாரச் சீர்திருத்தங்களை நிதியிட்டம் செய்யும் ஏனைய வழிவகைகள் அமெரிக்க முதலாளி வர்க்கத்தின் முன்னணி கொள்கை விளக்க சஞ்சிகைகளில் வெளியாகியது. அமெரிக்கா சைபீரியாவை 'கொள்வனவு' செய்வதையும் இது உள்ளடக்கியிருந்தது, இப்பிரேரணை 'வேர்ல்ட் பொலிசி ஜேர்ணலின்' 1992 குளிர்கால பதிப்பில் வெளியாகியது. இதன் ஆசிரியர் குழு கிளின்டன் நிர்வாகத்துடன் சேர்ந்து கொண்டுள்ள புதிய தொழில் செயலாளரையும் ஏனையோரையும் உள்ளடக்கிக் கொண்டுள்ளது. இதன் ஆசிரியர், மிகவும் 'மதிப்புக்குரிய' முதலாளித்துவ கொள்கைத்திட்ட ஆய்வாளரான வோல்ட்டர் ஏசல் மீட் ஆவார்.

அவர் எழுதியதாவது: ''கொள்வனவின் தாக்கமானது அமெரிக்கா சோவியத் யூனியனையோ அல்லது ருஷ்யாவைக் காட்டிலும் பெரிதும் திறமையான விதத்தில் சைபீரியாவினைச் சுரண்ட முடியும் என்பதை குறிக்கின்றது.''

இந்த ஆரோக்கியமற்ற பசியானது இன்று முதலாளி வர்க்கத்தின் கொள்கைத் திட்ட சஞ்சிகைகளில் வெளிவெளியாக கலந்துரையாடப்பட்டு வருவதோடு ஏகாதிபத்தியத்தின் அடிப்படையான தன்மையையும் அதன் இன்றைய நெருக்கடியின் ஆழத்தையும் எடுத்துக் காட்டுகின்றது. உலகப் பொருளாதார வீழ்ச்சி மோசமடைந்து சமூக ஸ்திரமின்மை அதிகரித்துள்ள ஒரு சமயத்தில் முதலாளித்துவ வல்லரசுகள் ருஷ்யாவையும் பழைய சோவியத் யூனியனையும் இறுதி இரத்தத் துளி வரையும் உறிஞ்சிக் குடிப்பதன் மூலம் தமக்கு புதிய வாழ்க்கையை தேடிக் கொள்ளலாம் என எதிர்பார்க்கின்றனர். சோவியத் அதிகாரத்துக்கு எதிரான அதன் நீண்ட போராட்டத்தின் போது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு, ஸ்டாலினிசம் தொழிலாளர்களின் ஒரு அரசியல் புரட்சி மூலம் தூக்கி வீசப்படாது விடின் அது முதலாளித்துவத்தின் புனருத்தாரணத்துக்கு வழிவிட்டுக் கொடுக்கும் எனத் திரும்பத் திரும்ப எச்சரிக்கை செய்தது. கடந்த எட்டு ஆண்டுகளின் நிகழ்வுகளின் மூலம் இந்த எச்சரிக்கை நிரூபிக்கப்பட்டுள்ளது. முதலாளித்துவப் புனருத்தாரணம் ஒரு உக்கிரமான எதிர்ப்புரட்சி இல்லாமல் யதார்த்தமாகிவிடாது என ட்ரொட்ஸ்கிஸ்டுகள் அடிக்கடி விடுத்து வந்த மற்றுமோர் எச்சரிக்கையையும் கடந்த மாதச் சம்பவங்கள் ருசுப்படுத்தியுள்ளது. 1991 டிசம்பரில் தொழிலாளர் அரசு உத்தியோகபூர்வமாகக் கலைக்கப்பட்டமை இந்த அவசியமான கலகத்தின் அமைப்பின் முதல் நடவடிக்கை மட்டுமே.

(16 ம் பக்கம் பார்க்க)

சோசலிச புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்பு!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேருங்கள்

பெயர் ..............................................

முகவரி: ..............................................

கழகத்தைப் பற்றி மேலும் விபரங்கள் பெற இந்தப் பத்திரத்தை நிரப்பி அனுப்ப வேண்டிய முகவரி:

தேசிய செயலாளர்,

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்

இல: 90, 1வது மாளிகாகந்தை ஒழுங்கை, கொழும்பு - 10.

படிப்பகம்

www.padippakam.com



# மாகாண சபைத் தேர்தல் குண்டின் பின்னணி

தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளுக்கு எதிராக புதிய மட்டத்திலான ஒரு தாக்குதல் தொடுப்பதற்கு ஒரு புதிய பாதை திறக்கும் இலக்கில் பிரேமதாச அரசாங்கம் மே 20 21ம் திகதிகளில் மாகாண சபைத் தேர்தல்களை நடாத்த முடிவு செய்துள்ளது.

குறிப்பிட்ட காலத்துக்கு முன்னராகவே மாகாண சபைத் தேர்தல்களை நடாத்தத் தீர்மானம் செய்ததன் மூலம் தாம் 'ஜனநாயகவாதிகள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளதாயும்' ஜனாதிபதி பிரேமதாச கதையளந்துள்ளார், உண்மையில் இத்தேர்தல் தயாரிப்புக்கள் மூலம் பிரேமதாச அரசாங்கம் தமது மக்கட் படுகொலை ஆட்சியின் கரங்களைப் பலப்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றது என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களை எச்சரிக்கின்றது.

## இரத்தக் களரி விஸ்தரிப்பு

யாழ்ப்பாணக் குடா நாட்டில் இரத்தக் களரி நடவடிக்கைகளை மேலும் விஸ்தரிக்கவும், வட—கிழக்கு மாகாணங்களில் ஒடுக்கப்படும் தமிழ் தேசிய இனத்தினரை ஒடுக்கித் தள்ளும் இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்கவும், ஏகாதிபத்தியப் பகற்கொள்ளையின் நிபந்தனைகளை மேலும் மேலும் உறுதிப்படுத்தி தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளை சிதறடிக்கவும 'மக்கள் ஆணை' கிடைத்துள்ளதாகக் காட்டிக் கொள்ள இந்த மாகாண சபைத் தேர்தல்களை பயன்படுத்தலாம் என பிரேமதாச அரசாங்கம் கணக்குப் பார்க்கின்றது. அத்தோடு சி.ல.சு.க. உட்பட்ட ஏனைய முதலாளித்துவக் கட்சிகளின் நாற்றமெடுப்பையும் சமசமாஜ — கம்யூனிச —நவசமசமாஜ தலைவர்களின் துரோகக் காட்டிக் கொடுப்புக்களையும், அரசினதும் குண்டர்களதும் காடைத்தனங்களையும் தமக்குச் சார்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியும் என யூஎன்பி அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

பிரேமதாச அரசாங்கத்தின் திட்டங்களைக் கொட்டை எழுத்துக்களில் காட்டி சி.ல.சு.க. மற்றும் இரண்டு முதலாளித்துவக் கட்சிகளுடன் சமசமாஜ—ஸ்டாலினிச சந்தர்ப்பவாதிகள் 'மக்கள் ஐக்கிய முன்னணி' என்ற பேரில் புதியதோர் முதலாளித்துவக் கூட்டினை நிறுவியுள்ளதோடு, இந்த மாகாண சபை தேர்தலின் பொருட்டு சுடச்சுட தேர்தல் ஆணையாளரிடம் பதிவு செய்தும் கொண்டுள்ளனர். இதற்கிடையே நவசமசமாஜ சந்தர்ப்பவாதிகள், தொழிற்சங்கத் தலைவர்கள். தமிழ் முதலாளித்துவக் கட்சிகள், இன்னும்பல அமைப்புக்களுடன் சேர்ந்து 'மக்கள் விடுதலை அமைப்பு' என்ற பேரில் ஒரு முன்னணியை நிறுவியுள்ளனர்.

கடந்த 16 ஆண்டுகளாக யூஎன்பி அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டு தோட்டத் தொழிலாளர்களுக்கும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராகத் தொழிற்பட்டு வந்த இ.தொ.காவின் முதலாளித்துவத் தலைவர்கள் இந்த மாகாண சபைத் தேர்தலிலும் வழக்கம் போல் யூஎன்பி அரசாங்கத்துக்கு முண்டு கொடுப்பதெனத் தீர்மானித்துள்ளனர்.

யூ.என்.பி. அரசாங்கத்தின் தாக்குதல்கள் காரணமாகக் கிளர்ந்து எழுந்துள்ள தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களைத் தடம்புரளச் செய்யவும், அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கவும்முதலாளி வர்க்கத்துக்குப் பலியிடவும் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ—இதொகா தலைவர்கள் தம்மிடையே வேலையைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இந்த மாகாண சபைகள் ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் இந்திய - இலங்கை உடன்படிக்கையின் கீழ் நிறுவப்பட்டன. இந்திய—இலங்கை உடன்படிக்கை, தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ள இந்திய ஆக்கிரமிப்புப் படைகளை அழைக்கவும், தென்மாகாணங்களில் தொழிலாளர்—ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ள இலங்கை இராணுவத்தினை கட்டவிழ்த்து விடவும், ஏகாதிபத்தியவாதிகளின் ஆசீர்வாதங்களுடன் ராஜீவ் காந்தி -ஜே.ஆர். ஜெயவர்தனா செய்த சதியின் பெறுபேறாகும். வட்டமேசை மகாநாடுகளில் நுழைந்து கொண்டிருந்த துரோகத் தலைமைகளை ஜயவர்த்தனா அரசாங்கம் இந்த ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கு உரிய முறையில் பயன்படுததியதோடு, இத்துரோகிகள் முதலாளி வர்க்கம் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டுவிடும் வல்லமை கொண்டுள்ளதாகவும் பிரச்சாரம் செய்தனர்.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே தொழிலாளி வர்க்க வேலைத் திட்டத்தின் அடிப்படையில் இந்திய—இலங்கை உடன்படிக்கையை எதிர்த்ததோடு மாகாண சபைத் தேர்தல்களைப் பகிஷ்கரிக்கும்படி தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை வேண்டியது. ஜயவர்தனா அரசாங்கம் 1988ல் மாகாண சபைத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்த வேளையில் அதன் தீய பயங்கர விளைவுகளையிட்டு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழு விடுத்த எச்சரிக்கையை தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களுக்கு இங்கு நினைவூட்டுவது பொருத்தமானது: ''மாகாண சபைகள் இந்திய ஆக்கிரமிப்புடன் இணைந்ததும், சதாகாலமும் தமிழ் தேசிய இனத்தினை ஒடுக்கித் தள்ளும் பொருட்டு இன மோதுதல்களைத் தூண்டிவிடுவதை இலக்காகக் கொண்டதுமான அமைப்பானதால் அவற்றைப் பகிஷ்கரிக்க வேண்டும்.

''தொழிலாளர் வர்க்கத் துரோகத் தலைவர்களான சமசமாஜ—ஸ்டாலினிச— நவசமசமாஜ - இதொகா தலைவர்கள் கூறிக்கொள்வது போல் இந்த மாகாண சபைகள் மக்களிடம் அதிகாரத்தை பகிர்ந்தளிப்பன அல்ல. மாறாக இராணுவ ஆட்சிக்காக இந்திய — இலங்கைப் படைகள் கூட்டாக மேற்கொண்டுவரும் வேலைத்திட்டத்துக்கான 'லைசென்சு' வழங்கப்படுபவையாகும்'' (''கம்கறுமாவத்த''— ஏப்ரல் 1, 1988)

கடந்த ஐந்து ஆண்டுகளின் போது கடந்து சென்ற ஒவ்வொரு கணமும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இந்த எச்சரிக்கையை நிரூபித்தது. வட—கீழ் மாகாணங்களில் இடம்பெற்ற இரத்தக் களரிகளைத் தொடர்ந்து இடம்பெற்ற மாகாணசபைத் தேர்தல்கள் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தினை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு இங்கு நிலைகொண்டிருக்கச் செய்யப் பயன்படுத்தப்பட்டது. இந்திய இராணுவம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின கடும் எதிர்ப்பினால் தோல்வி கிட்டும் தறுவாயிலேயே வாலைச் சுருட்டிக் கொண்டு இங்கிருந்து வெளியேற நேரிட்டது. இதை இந்திய முன்னணி இராணுவத் தளபதிகளும் கூட ஒப்புக் கொண்டனர்.

மாகாண சபை மோசடிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ், முஸ்லீம முதலாளித்துவ இயக்கங்கள் இடையே நிரந்தரமான மோதுதல்களையும் ஒடுக்குமுறையையும் உச்சக்கட்டத்துக்குக் கொணரும் துரும்பாகப் பயன படுத்தப்பட்டது. சோடானுகோடி பொதுஜன நிதியைக் கொட்டி, மக்களின் மீது யுத்தத்தின் சுமையைத் திணித்து, பிரேமதாச அரசாங்கம் நடாத்திவரும் இனவாத யுத்தம் இந்த ஆத்திரமூட்டல்கள் ஊடாகவே சென்று கொண்டிருக்கின்றது.

ஜயவர்த்தன அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு பிரேமதாச அரசாங்கம் தொடர்ந்த ஒரு இலட்சம் சிங்களக் கிராமிய இளைஞர்களை கொன்றுதள்ளும் திட்டத்துக்கும் இந்த இந்திய— இலங்கை உடன்படிக்கையே வழிதிறந்தது. யூ.என்.பி. அரசாங்கம் இந்தக் கொலைகார பயங்கரத்தினை ஏகாதிபத்தியவாதிகளின் கட்டளைகளை அமுல் செய்யவும் தொழிலாளி - ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகளைச் சிதறடிக்கவும் திரும்பப் பயன்படுத்தியது.

## கேவலமான பிரச்சாரம்

இந்திய — இலங்கை உடன்படிக்கையின் கீழ் நிறுவப்பட்ட மாகாண சபைகளின் மூலம் தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் தேசிய ஜனநாயக உரிமைகள் மட்டுமன்றி நாடு பூராவும் உள்ள மக்களுக்கு அதிகாரத்தையும் கூட பகிர்ந்தளிக்கின்றது என்ற கேவலம் பிரச்சாரத்தில் சமசமாஜ—ஸ்டாலினிச நவசமசமாஜ கட்சித் தலைவர்கள் ஈடுபட்டிருந்தனர். இதன்மூலம் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் கண்களில் மண்ணைவாரிச் சொரிந்த இவர்கள் பயங்கரத்தையும் இனவாத யுத்தத்தையும் உக்கிரமாக்குவதற்கான நிலைமைகளையும் உருவாக்கினர். வட— கீழ் மாகாணங்களில் நிறுவப்பட்ட மாகாணசபை இந்திய ஆக்கிரமிப்பாளரை எதிர்த்து நின்ற மக்களை எதிர்க்கும் கைத்தேங்காயாக விளங்கியதோடு, தென்மாகாணங்களில் அவை நிர்வாகம், நலன் புரி சேவைகள் பரவலாக்கம் என்ற பேரில் மக்களின் உரிமைகளை துடைத்துக் கட்டும் அமைப்புக்களாகின.

பின்தங்கிய நாடுகளில் தேசியப் பிரச்சினை உட்பட்ட முதலாளித்துவ ஜனநாயகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தேசிய முதலாளி வர்க்கம் எனப்படுவது இலாயக்கற்றது என்பதை இந்திய— இலங்கை உடன்படிக்கையும், மாகாண சபைகள் மோசடியும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் முன்நிலையில் மீண்டும் ருசுப்படுத்தியுள்ளது. உண்மையில் அவை நிறுவப்பட்டது இந்தத் தீர்த்து வைக்கப்படாத பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு அல்ல. அவை தீர்க்கப்படுவதாகக் காட்டி தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளையும், ஒடுக்குமுறையையும் உக்கிரமாக்குவதே நோக்கம்.

இந்திய—இலங்கை உடன்படிக்கையும் மாகாண சபைகளும் 'தோல்வி கண்டிருக்குமானால்' அதற்கு ஜனாதிபதி பிரேமதாசவும் எல்லாவற்றுக்கும் மேலாக விடுதலைப் புலிகளின 'தவறுகளும்' தான் காரணம் எனக் காட்ட முயலும் சமசமாஜ — கம்யூனிச— நவசமசமாஜ துரோகிகள், இப்பிரச்சினையை ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளினாலேயே தீர்க்க முடியும் என்ற நிலைப்பாட்டை கொண்டுள்ளனர். இவர்கள் இந்த நிலைப்பாட்டின் அடிப்படையில் இன்னுமோர் படி மேலே சென்று, 'விடுதலைப் புலிகளை தனிமைப் படுத்தி' யுத்தத்தை வெல்லும் பரந்த முன்னணியை அமைக்கும்படி பிரேமதாச அரசாங்கத்துக்கும், பொதுவில் முதலாளி வர்க்கத்துக்கும் ஆலோசனை வழங்குகின்றனர், 1993 பெப்ரவரி 11ம் திகதிய சமசமாஜ பத்திரிகை கூறுவது இது தான்:

''நாட்டின் எதிர்காலத்தை காக்கும் பொருட்டு சிங்கள இனவாதத்துக்கு முகம் கொடுக்க தமக்கு பொறுப்புண்டு என்பதை ஒப்புக் கொள்ளுமாறு இலங்கை அரசாங்கத்தினை நெருக்க வேண்டும். அயல் தமிழ் பிரதேசங்களில் அதிகாரத்தினை பரவலாக்கும் மாநில அலகாகக் கொள்வது எதிக்கக் கூடிய கோரிக்கையல்ல. அத்தோடு முழுமையாக முழு இலங்கையினதும் தவறுக்கு அது காரணமாகும்... இந்த யுத்தத்தினை நிறுத்தும் பொருட்டு பரந்த முன்னணியை நிறுவவும் சமாதானத்தை உண்டுபண்ணவும் முடிந்தால் எல்ரீரீஈ யின சாரியார்கள் கூட இன்று நிலைமையை விமர்சன நோக்கில் பார்ப்பர்''.

நவசமசமாஜ துரோகிகளின நிலைப்பாடு இதிலிருந்து வேறுபட்டதல்ல: இந்திய—இலங்கை உடன்படிக்கைக்கு ஆலவட்டம் பிடித்த நவசமசமாஜக் கட்சித் தலைவர்கள், மாகாண சபைகள் 'வெற்றிகரமாக' தொழிற்படும் போது தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் ஓரளவேனும் உத்தரவாதம் செய்யப்படும் என்ற பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இச்சகல துரோகிகளும் முதலாளித்துவ அரசினை பேணுவது பற்றிய உபாயம், மூலோபாயம் சம்பந்தமாக முதலாளிகளுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். இந்த இலக்கிலேயே இவர்கள் 'புதிய' முன்னணியை நிறுவியுள்ளனர்.

தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் ஏகாதிபத்தியவாதிகளதும் ஏகாதிபத்தியச் சார்பு ஏஜண்டுகளதும் பொறிகிடங்குகளை நிராகரிக்க வேண்டும் அவர்களை அரசியல் ரீதியில் துடைத்துக் கட்ட வேண்டும், இதற்கு சுயாதீனமான தொழிலாளி வர்க்க வேலைத்திட்டம் அவசியம். இதனைப புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே வழங்குகின்றது.

1988ல் மாகாண சபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கும்படி பு.க.க. விடுத்த அறிக்கையை இங்கு நினைவு கூர்வது பெரிதும் பொருத்தமானது: ''இந்நிலைமையில் தமிழ் தேசிய இனத்தின் தேசியப் பிரச்சினையாவும் தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பிரச்சினையும் விவசாயிகள், வேலையற்ற இளைஞர்களின் பிரமாண்டமான பிரச்சினையையும் தீர்ப்பது தவிர்க்க முடியாத பொறுப்பாகியுள்ளது. யூ.என்.பி. யை வெளியேற்றி சோசலிச வேலைத் திட்டத்துக்கு சமதம் பூண்ட தொழிலாளர், விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணரும் பொருட்டு தொழிலாள வர்க்கம் உடன் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.''

பிரேமதாச அரசாங்கமும் முதலாளித்துவ வர்க்கமும் மாகாண சபைத் தேர்தல் மோசடியின் பின்னணியில் தயார் செய்யும் எதிர்ப்புரட்சி வேலைத் திட்டத்துக்கு எதிராக மேற்சொன்ன வேலைத்திட்டத்தின் அடிப்படையில் தொழிலாளர் — ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்ட வேண்டும். குறுக்கு வழிகள் எனப்படுபவை எல்லாம் முதலாளித்துவ தீர்வுக்கான பொறிக்கிடங்குகள். பாட்டாளி வர்க்க அனைத்துலகவாத வேலைத் திட்டத்தின் அடிப்படையில் போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை கட்டியெழுப்ப சகல தொழிலாளர்கள்— ஒடுக்கப்படும் மக்கள்—இளைஞர்கள் ஒன்றிணைய வேண்டும்,

படிப்பகம்

www.padippakam.com



# இனவாத வேட்டைக்கு முற்றுப்புள்ளி வை!...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்நாட்டு முதலாளித்துவ வர்க்கம் கையாளும் ஒரு நச்சு ஆயுதம்.

இன்னும் ஒரு சில தினங்களில் உதவி வழங்கும் நாடுகளின் பாரிஸ் கூட்டத்துக்கு பிரதமர் விக்கிரமசிங்க தலைமையில் யூஎன்பி அரசாங்க தூதுக் குழு வெளிக்கிட்டுச் செல்ல ஆயத்தமாகி கொண்டுள்ள நிலைமையில் இத்தகைய ஒரு இனவாத வேட்டை இடம்பெறுவது ஏகாதிபத்திய, முதலாளித்துவ புள்ளிகளுக்கு பெரும் அவசியம். உலக வங்கியின் தென்ஆசிய பிரிவின் பணிப்பாளர் போல் இசன்மான் குழுவினர் கொழும்பில் பிரதமர், ஜனாதிபதி ஆகியோருடன் தனியார்மயமாக்கத்தை விஸ்தரித்தல், நலன்பரி சேவைகளின் மிச்ச சொச்சங்களை வெட்டுதல் ஆகிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடியதாகத் தெரிகின்றது. இவர்களைச் சந்தித்த ஜனாதிபதி விஜேதுங்க ''எதுவித மாற்றமும் இல்லாமல் பொருளாதாரக் கொள்கைகளும் மறுசீரமைப்பும் நடைபெறும்'' என உத்தரவாதமளித்ததாக செய்திகள் வந்துள்ளன.

ஏகாதிபத்தியவாதிகள் வடக்கு - கிழக்கு ''யுத்தத்தை தீர்ப்பதை' உதவி வழங்கும் பேச்சுவார்த்தைகளில் முக்கிய பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப் போகின்றார்கள். 2300 கோடி ரூபாக்களைத் தாண்டியுள்ள வருடாந்த யுத்த செலவினங்களை குறைக்கும்படி இந்த உதவி வழங்கும் குழு கேட்பதாகச் சொல்லப்படுகின்றது. இதற்கிடையே விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முதலாளித்துவத் தலைமை யுத்தத்தினை நிறுத்தி 'அரசியல் தீர்வு' காணும்படி யூஎன்பி அரசாங்கத்தை நெருக்குமாறும்.மனித உரிமைகள் மீறலை ஆராயுமாறும் உதவி வழங்கும் நாடுகளின் குழுவைச் சேர்ந்த அரசாங்கங்களைக் கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

இனவாத யுத்தத்தினை நிறுத்தவோ அல்லது 'அரசியல் தீர்வு' காணவோ அல்லது மனித உரிமைகளைக் காக்கவே ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதுவிதமான அக்கறையோ ஆர்வமோ கிடையாது என்பதை அறியாத வர்க்க நனவுள்ள தொழிலாளியோ, ஒடுக்கப்படுவோரோ இருக்க முடியுமா? இனவாத யுத்தத்தை நடாத்துவதிலும், மனித உரிமைகளை மீறுவதிலும் முன்னணியில் நிற்போர் இந்த ஏகாதிபத்தியவாதிகளே. இன, மத மோதுதல்களைத் தூண்டி விட்டுவிட்டு மனித உரிமைகளின் காவலர்களாகவும் சமாதானத்தின் தூதுவர்களாகவும் இரட்டை வேஷம் போட்டு வரும் இவர்கள், காலனித்துவ, அரைக்காலனித்துவ நாடுகளில் ஈரான், சோமாலியா, பொஸ்னியாப் பிராணியில் பாய்ந்து வீழ்வதற்கான சந்தர்ப்பத்தை சிருஷ்டிப்பதில் நனவாக ஈடுபட்டுள்ளனர்.

யூஎன்பி அரசாங்கத்தின் இனவாத யுத்தத்தினை விடுதலைப் புலிகள், ஏகாதிபத்தியத் தலையீட்டுக்கு அழைப்பு விடுப்பதற்கான பிரச்சார சாதனமாக்கிக் கொண்டுள்ளனர். தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி. ஆர். எல், எப்.. டெலோ, போன்ற தமிழ் முதலாளித்துவ இயக்கங்களின் நிலைப்பாடும் இதுவே. ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கி வீசி,உலக சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக தமிழ் ஈழம்—இலங்கை சோசலிசக் குடியரசினை அமைக்கப் போராடுவதன் மூலமே தமிழ் ஒடுக்கப்படுவோரின் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்ய முடியும். நான்காம் அகிலத்தின் இலங்கைப் பகுதியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே இம்முன்னோக்கின் அடிப்படையில் போராடி வருகின்றது.

# சு. வ. வ. பக்டரி..

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

கியுள்ளனர். (விபரம் 8ம் பக்கம்) வங்குரோத்தடைந்த இக்கம்பனியைக் கைவிட்டு செல்வதற்கு முன்னர்காப்புறுதிப் பணம் கறக்கும் பொருட்டே இந்த விளையாட்டு பொருள் உற்பத்திப் பக்டரிக்கு தீமூட்டப்பட்டுள்ளதாக தாய்லாந்து பொலிசார் நம்புகின்றனர். அமெரிக்காவில் இறைச்சி பதனிடும் பக்டரியில் பூட்டுப் போட்டு மூடப்பட்ட கதவுகளுக்குள் அடைபட்ட நிலையில் 25 பெண் தொழிலாளர்கள் கொல்லப்பட்ட சம்பவம் 18 மாதங்களுக்கு முன்னர் இடம்பெற்றது.

அரைக்காலனித்துவ நாடுகளில் யூஎன்பி அரசாங்கப் பாணியிலான ஏஜன்டு கொம்பிரதோர் ஆட்சியாளர்களைக் கொண்டு ஏகாதிபத்தியவாதிகள் 'சுதந்திர வர்த்தக வலயம்' என்ற பேரில் தொழிலாளர் ஊழியத்தை கசக்கிப் பிழியும் வதை முகாம்களை ஏற்படுத்தி உள்ளனர். இந்த பன்னாட்டுக் கம்பனிக்காரர்களுக்கு அவசியப்படுவது ஒன்றேயொன்றுதான். இலாபம் கறப்பதே. இந்தச் சுரண்டல் சு.வ.வ. களில் மட்டுமன்றி யூஎன்பி அரசாங்கத்தினால் சமீபத்தில் நிறுவப்பட்ட 200 ஆடை தயாரித்தற் தொழிற்சாலைகளிலும் உக்கிரம் கண்டுள்ளது.

இத்தகைய சுதந்திர வர்த்தக வலயங்களை நாடு பூராவும் நிறுவுவதே யூஎன்பி அரசாங்கத்தின் திட்டம். இராணுவ—பாசிச ஒடுக்குமுறைக்குத் தொழிலாள—ஒடுக்கப்படும் மக்களைப் பலியிடுவதே ஆளும் வர்க்கத்தின் திட்டம். தொழிலாளர்களின் சக்தியை அணிதிரட்டி செயற்படும் பொருட்டு சகல வேலைத்தலங்களிலும் பக்டரிகளிலும் நடவடிக்கை குழுக்களை அமைப்பது உடனடிப் பணியாகியுள்ளது. யூஎன்பி அரசாங்கத்தை வெளியேற்றி, சோசலிச வேலைத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் தொழிலாளர்—விவசாயிகள் அரசாங்கத்துக்குப் போராட அத்தகைய அணிதிரள்வு அவசியம் அந்த முன்னோக்கின் அடிப்படையில் துரோக தலைமைகளை வெளியேற்றி புரட்சித் தலைமையைக் கட்டியெழுப்ப நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமே போராடுகின்றது. பு.க.க.வில் சேர்ந்து இப்புரட்சித் தலைமையைக் கட்டி எழுப்பும் வரலாற்றுப் பணிக்கு கைகொடுக்குமாறு 'தொழிலாளர் பாதை' வேண்டுகின்றது.

# நவசமசமாஜ கட்சி ஒரு. .

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

6 . தமிழ் தேசிய இனப் பிரச்சினையைப் பொறுத்த மட்டில் தமிழ், முஸ்லீம் இனவாத, மதவாத முதலாளித்துவ கட்சிகளின் தீர்வுகளில் இருந்து வேறுபட்ட எந்த ஒரு தீர்வும் நவசமசமாஜக் கட்சிக்குக் கிடையாது. நவசமசமாஜக் கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள சகல கட்சிகளும் யூஎன்பி இனவாத யுத்தத்தின் எடுபிடிகளாகத் தொழிற்படுபவை. தமிழ் தேசிய இனப் பிரச்சினைக்கு ஒரே தீர்வான இலங்கை—தமிழ் ஈழம் சோசலிசக் குடியரசுக்கு எதிராக இச்சகல கட்சிகளும் இனவாத ஒற்றையாட்சி முறையைப் பேணுகின்றன. நவசமசமாஜக் கட்சி இவர்களுடன் தோளில்கைபோட்டுக் கொண்டுள்ளது.

தமிழ், சிங்கள தொழிலாளர்களின் ஐக்கியத்தினைச் சிதறடிக்கவும் தமிழ் தேசிய இனத்தின் உள்ளே இந்து,முஸ்லீம் மதவாத மோதுதல்களுக்குத் தூபமிடுபவர்களாகவும் நவசமசமாஜ கட்சி மாறியுள்ளதை இவை ஊர்ஜிதம் செய்கின்றன. நவசமசமாஜக் கட்சியின் வலதுசாரி பாய்ச்சல், ஏகாதிபத்தியவாதிகளின் கைத்தேங்காயாக உலகம் பூராவும் தொழிற்படும் பப்லோவாத ஏர்ணஸ்ட் மண்டேலின் இயக்கத்துடனான இவர்களின் அணிதிரள்வை ஊர்ஜிதம் செய்ய இடம்பெறுகின்றது. 1964ல் சமசமாஜக் கட்சியை முதலாளித்துவ சி.ல.சு.க. வின் பிடிக்குள் இட்டுச் செல்ல முக்கிய பாத்திரம் வகித்தது ஏர்ணஸ்ட் மண்டேலின் அமைப்பாகும். சோவியத் யூனியனிலும் கிழக்கு ஐரோப்பாவிலும் ஸ்டாலினிச அதிகாரத்துவங்கள் கவிழ்ந்து கொட்டியதைத் தொடர்ந்து ஏகாதிபத்தியத்துக்கு இல்லாமல் போன முக்கிய முண்டுகோலின் பாத்திரத்தினை இட்டு நிரப்ப மண்டேலின் அனைத்துலகம் எனப்படுவது முன்வந்துள்ளது. கிழக்கு ஐரோப்பாவில் ஏகாதிபத்திய கொள்ளையின் பொருட்டு முதலாளித்துவ புனருத்தாரணத்துக்கு அவர் முழு மூச்சாக உழைக்கின்றார். இந்தியாவில் மண்டேலின் சீடர்கள் பாசிச பாரதிய ஜனதா கட்சியுடன் தொழிற் சங்க முன்னணி அமைப்பதில் ஈடுபட்டுள்ளனர். நவசமசமாஜ கட்சி இன்று எங்குமில்லாத விதத்தில் இந்த ஏகாதிபத்திய முதலாளித்துவ வேலைத்திட்டத்தினை வெளியிட்டுள்ளது.

# ஜேர்மனியில்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)

ணைக்கப்பட்ட கிழக்கு ஜேர்மன் தொழிலாளர் தமது சம்பள உயர்வுக்கான கோரிக்கையை முன்வைத்து வேலை நிறுத்தம் செய்தமை, தொழிலாள வர்க்கம் தமக்கு எதிராக விடுக்கப்படும் தாக்குதல்களுக்கெதிராக பெரும் போராட்டத்தில் இறங்க தயார் என்பதையே காட்டுகின்றது ஜேர்மனிய முதலாளிகள் இந்த நிலைமைகளை யிட்டு பெரிதும் குழம்பியுள்ளனர்.

பீ, எஸ், ஏ. தலைவருக்கு எதிரான குண்டன் தாக்குதல் இந்நிலைமையின் கீழ் நடந்துள்ளது. இந்த தாக்குதலுக்கெதிராக எதிர்ப்புத் தெரிவிக்க முன்வருமாறு வர்க்க உணர்வுள்ள சகல தொழிலாள. இளைஞர்களையும் நாம் வேண்டுகின்றோம்.


எதிர்ப்புக் கடிதங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

Minister Frieder Birzele,
Innenministerium des Landes Baden-Württemberg, Dorotheenstraße 6,
D-70173 Stuttgart und
Oberstaatsanwalt Schrimm,
Neckarstraße 145, D-70190 Stuttgart.

அதில் ஒரு பிரதியை கீழ்காணும்

முகவரிக்கு அனுப்பவும்.

Tholilalar Pathai
Postfach 1609
74321 Bietigheim-
Bissingen.




மார்க்சிச முன்னோக்கு

சர்வதேச தொழிலாளவர்க்கத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரொக்சிய சஞ்சிகை

சோவியத்யூனியனின் முடிவும்
சோசலிசத்தின் எதிர்காலமும்
"சிந்தனை" பத்திரிகையின்
பப்லோவாத முகமூடி கிழிகின்றது

யூகோசிலாவியாவின் உள்நாட்டுப்
போரின் பின்னணியில்

நான்காவது அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினது [illegible] வெளியீடு

இதழ் 1 இலக்கம் 1 ஆனி 1992

அனைத்து
தொடர்புகளுக்கும்

Tholilalar Pathai
Postfach 1609
74321 Bietigheim-
Bissingen

படிப்பகம்